IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: SOP.1/2023
DEPOSITION OF WITNESS: RW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | செல்வராணி | | | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | சிவலிங்கம் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | கீழ்புதுப்பாக்கம் | | | |
| Taluk/தாலுக்கா | : | செய்யாறு | Age/வயது | : | 55 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 12th day of August 2025.

**எ.ம.சா.1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

**எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணம்**

1. நானும் இறந்து போன சிவலிங்கமும் எடுத்துகொண்ட புகைப்படமும் அதற்கான குறுந்தகடும் எ.ம.சா.ஆ.9 மற்றும் எ.ம.சா.ஆ.10 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

இறந்து போன சிவலிங்கத்தின் தகப்பனார் பெயர் மாசாணம் ஆகும். அவருடைய தயார் பெயர் நேசம்மாள் ஆகும். அவர் உடன் பிறந்தவர்கள் 2 சகோதரர்கள் மற்றும் 3 சகோதரிகள் ஆவார்கள். முதல் சகோதரி பெயர் விஜயகுமாரி (எ) மாரியம்மாள். 2வது சசோதரியின் பெயர் செல்வமணி (எ) கௌரி. 3வது சகோதரி பெயர் பரமேஸ்வரி ஆவார். அவருடைய சகோதரர்கள் தர்மராஜ் மற்றும் குமரவேல் ஆவர். அதில் தர்மராஜ் மட்டும் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள குழந்தைகள் என்னுடைய தங்கையின் குழந்தை காவிய மற்றும் எனது இருமகள்கள் ஆவர். என்னிடம் காட்டப்படும் மற்றொரு புகைப்படத்தில் உள்ள மஞ்சள் நீராட்டு விழா ஜனனி என்பவருடையதாகும். அந்த விழாவிற்கு நாங்கள் அனைவரும் சென்றபோது, எடுத்த புகைப்படம் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள குறுந்தகடு உண்மை தன்மை அற்றது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பாரத ஸ்டேட் வங்கியின் கணக்கு புத்தகம் தற்போது நிலுவையில் இல்லை என்றால் அந்த கணக்கை நான் உபயோகிக்கவில்லை. ஆனால் அதை நான் முடிக்கவுமில்லை. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.5 மற்றும் எ.ம.சா.ஆ.6 , எ.ம.சா.ஆ.7 ஆவணங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.8 கேஸ் இணைப்பு செய்யாரிலேயே உள்ளது அதை பயன்படுத்தவில்லை

என்றால் சரியல்ல. அதை சிவலிங்கத்தின் அக்கா பயன்படுத்தி வருகின்றார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் குடும்ப நபர்கள் விபரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஜான்சிராணி என்பவரின் பெயர் உள்ளது என்றால் சரிதான். அதில் 03.06.1975 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சரண்யா என்பவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 14.10.2000 என்று பிறந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பகுதி 2 ல் மாசானம் என்பவரின் பெயரும், நேசம்மாள் என்பவரின் பெயரும், செல்வமணி என்பவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரவரது வயது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் நித்தியகலா மற்றும் குமாரவேலின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தர்மராஜ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதில் 01.03.2016 என்று கையொப்பத்தின் கீழ் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணம் **ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மா.சா.ஆ.7 ஆவணத்தில் உறவு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தற்சமயம் சென்னையில் வசிக்கிறேன். நான் தற்சமயம் எனது கணவருடன் வசிக்கிறேன் என்றால் இல்லை. நான் தனியாக தான் வசிக்கிறேன். மனுதாரர்களை வஞ்சிக்கும் நோக்குடன் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2025.08.12 17:40:15 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம். வந்தவாசி